பணியாளர் குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மாணாக்கரும், பணியாளர்களும் சென்றுவர வசதியாக 2 கிலோ மீட்டர் இணைப்புச் சாலை அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமூக மாற்றத்திற்கான முக்கிய காரணியாகவும், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் பின்னணியில் இருப்பவர்களாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒருமித்த அணுகுமுறையை வழங்கும் வகையிலும், தேசிய வளர்ச்சியில் அவர்கள் முழுமையாகப் பங்காற்றும் வகையிலும், மாநிலத்திற்கென ஓர் இளைஞர் கொள்கை வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள்மூலம், இளைய சமுதாயத்தினரின் உடல் நலமும், மன நலமும் மேலும் உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

4. பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம் மற்றும் புதிய திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்வித் துறை குறித்து இன்றைக்கு அறிவித்த அறிவிப்பிற்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய மாவட்டத்திற்கு 5 உண்டி உறைவிடப் பள்ளிகளைக் கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், நீங்கள் நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) விவாதம் எல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. கே. கோபிநாத்: *(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கோரிக்கை வேண்டாம். நன்றியோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் விவாதம் வேண்டாம். உட்காருங்கள்.*

திரு. கே. கோபிநாத்: *வேறு ஒன்றும் இல்லை. நன்றி மட்டும்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நன்றிதான் சொல்லிவிட்டீர்களே, உட்காருங்கள்.*

5. கவன ஈர்ப்பு

அஃரூர், பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அஃரூரில் உள்ள பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*